# <u>பத்திரிக்கை செய்தி குறிப்பு</u>
## <u>பட்டினப்பாக்கம்</u>

பட்டினப்பாக்கம் திட்டப்பகுதியிலுள்ள முற்றிலும் வலுவற்ற குடியிருக்க தகுதியற்ற நிலையில் உள்ள அரசு வாடகை குடியிருப்புகளில் குடியிருந்து வரும் ஒதுக்கீடுதாரர்களை காலி செய்வதற்கு தமிழ்நாடு அரசு பல முயற்சிகளை எடுத்துள்ளது. மேலும் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அவர்களுக்கு தேவையான மாற்று குடியிருப்பு குடிசைமாற்று வாரியத்தால் செம்மஞ்சேரியில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் மாற்று குடியிருப்போ அல்லது வேறு வீடுகளுக்கு செல்லுவதற்கு வட்டியில்லாத கடனாக ரூ.25000/– மோ, தருவதற்கு அரசு உறுதி அளித்தது மேலும் பட்டினப்பாக்கம் திட்டப்பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டியவுடன் அவரவர் தகுதிக்கேற்ப புதிய வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் உறுதி அளித்தது. ஆனால் பட்டினப்பாக்கம் திட்டப்பகுதியிலுள்ள ஒதுக்கீடுதாரர் சென்னையில் மாற்று குடியிருப்புகள் கோரி நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர். ஆனால் இந்த வழக்குகள் அனைத்தும் அரசுக்கு சாதாகமாக தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

மேலும் நீதிமன்ற உத்தரவின்படியும் அரசின் முயற்சியாலும் அனேக ஒதுக்கீடுதாரர்கள் அவர்கள் குடியிருப்பை காலி செய்துள்ளனர். தற்போது பட்டினப்பாக்கத்திலுள்ள அரசு வாடகை குடியிருப்புகளில் 239 ஒதுக்கீடுதாரர்கள் அவர்களுடைய உயிர்களையும், உடைமைகளையும், பொருட்படுத்தாமல் அலட்சியமாக குடியிருந்து வருகிறார்கள். இவர்களில் 78 பேர்கள் அரசு தலைமை செயலகத்திலும், 29 பேர்கள் சென்னை நீதிமன்றங்களிலும், 20 பேர்கள் சுகாதார துறையிலும், 15 பேர்கள் காவல்துறையிலும், 11 பேர்கள் பொது பணித்துறைகளிலும், தலா 7 நபர்கள் மீன்வளத் துறையிலும், நில அளவைத் துறையிலும், மீதமுள்ள 72 பேர்கள் பல்வேறு அரசு அலுவலகங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள் மற்றும் 14 நபர்கள் பொது ஒதுக்கீட்டு பிரிவின் கீழ் அரசு அல்லாத பிரிவை சார்ந்தவர்கள் ஆவார்கள்.

அரசு அங்கு குடியிருக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினரின் உயிர்களை காப்பாற்றுவதில் மிகவும் அக்கரை கொண்டு உள்ளது. இந்நிலையில் அவர்களின் நலன் கருதி அங்கு குடியிருப்பவர்களை பலவந்தமாக காலி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு வாரிய விதிமுறைகளின்படி 264 ஒதுக்கீடுதாரர்களுக்கு வெளியேற்று தாக்கீதுகள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நேரிலும் கொடுப்பதற்கு

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் 205 பதிவுத் தபால் பெற்றதற்க்கான ஒப்புகை பெறப்பட்டது. 153 ஒதுக்கீடுதாரர்களுக்கு நேரடியாக கொடுக்கப்பட்டது. நேரில் பெறாத மற்றும் பெற மறுத்த 111 நபர்களுக்கு அவர்களுடைய குடியிருப்பு கதவுகளில் ஒட்டப்பட்டு புகைபடமும் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒதுக்கீடுதாரர்கள் பணிபுரியும் அரசு அலுவலர்களின் துறை தலைவர்களுக்கு அபராத வாடகை அவர்களது மாத சம்பளத்திலிருந்து 1.8.2008 முதல் பிடித்தம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அபராத வாடகை என்பது பொருளாதார வாடகை மற்றும் சகாய வாடகை இவற்றில் எது அதிகமோ அதில் மூன்று மடங்கு வசூல் செய்ய வேண்டும். ஒதுக்கீடுதாரர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கீடு ரத்து செய்து நோட்டீஸ் அனுப்பியதால் அவர்கள் 1.8.2008 முதல் அனுமதியில்லாமல் குடியிருந்து வருவதாக கருத்தப்பட்டுள்ளது. மொத்த அபராத வாடகை நிலுவைத் தொகை ரூ.63,82,189/– இது 1.8.2008 முதல் 30.6.2009 வரை உள்ள அபராத வாடகையாகும். மேலும் அந்தந்த துறை அதிகாரிகளின் மூலம் காலி செய்ய மறுக்கும் ஒதுக்கீடுதாரர்களின்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

எனவே காலி செய்ய மறுத்து தொடர்ந்து குடியிருக்கும் ஒதுக்கீடுதாரர்கள் அரசுக்கு ஒத்துழைப்பு தந்து அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் உயிர் மற்றும் உடமைகளை கருத்தில் கொண்டு பழுதடைந்த மிகவும் அபாயகரமான பட்டினப்பாக்கம் குடியிருப்புகளை காலி செய்ய மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் அவ்வாறு காலி செய்ய மறுக்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு பட்டினப்பாக்கம் திட்டத்தில் புதியதாக கட்டபடவுள்ள குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு பெற அடயாள அட்டை வழங்கப்பட மாட்டாது.